Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

28.12.2020 திங்கட்கிழமை தொடர்புக்கு 076 584 2222



## மாகாண சபைத் தேர்தல் கோத்தாபய மந்திராலோசனை!

கொழும்பு, டிசெ. 28
ஆளும் கட்சியினருடனான அவசர கூட்டம் ஒன்று இன்று மாலை 6 மணிக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 2

## தம்மிக்கவின் மருந்தை குடித்தவருக்கு தொற்று

கொழும்பு, டிசெ. 28
கேகாலை மருத்துவர் தம்மிக்க பண்டாரவால் தயாரிக்கப்பட்டது எனக் கூறப்படுகிற கொரோனாத் தடுப்புப் பானத்தை குடித்த ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என, வரக்காப்பொல 2

# அரசுக்கு அபாய எச்சரிக்கை!

*மாகாண சபைத் தேர்தலுக்கு எதிராக போர்க்கொடி தூக்குகின்றனர் பிக்குகள்*

கொழும்பு, டிசெ. 28
இயற்கைச் சாவடைந்துள்ள மாகாண சபைகளுக்கு உயிர் கொடுப்பதற்கு முயற்சிக்கக்கூடாது. அவ்வாறு முயற்சித்தால் இந்த அரசுக்கும் முடிவுகட்டப்படும். இவ்வாறு 'தேசிய பிக்கு அறிஞர்களின் கருத்தரங்கு' என்ற அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. 'தேசிய பிக்கு அறிஞர்களின் கருத்தரங்கு' அமைப்பின் பிரதிநிதிகளான பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர், இத்ததெமலியே ஹிந்தசார தேரர், கலாநிதி பிடவல உபாலி தேரர், மாதுருவாவே தம்மீஸ் 2

# ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறையிலிருந்து மீட்போம்!!!

## நல்லூரில் கவனவீர்ப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 28**
**சிறையில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கக் கோரி நல்லூரில் இன்று திங்கட்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.** 2





## தாயும் 3 வயதுக் குழந்தையும் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

வவுனியா, டிசெ. 28
வவுனியா பறண்நட்டகல் பகுதியில் கிணற்றிலிருந்து தாயினதும் அவரது மூன்று வயது பெண் குழந்தையினதும் சடலங்களை ஓமந்தை பொலிஸார் இன்று மதியம் மீட்டுள்ளனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த ரமேஸ் ஜெயலலிதா (வயது - 42), அவரது மூன்று வயது மகளான நிதுர்சனா ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ள னர். பெண் மற்றும் அவரது மூன்று பிள்ளைகளும் வீட்டில் இருந்துள்ளனர். கணவன் வீட்டில் இல்லை. இரவு 2




## ஜனாஸா எரிப்புக்கு எதிராக யாழ். நகரில் போராட்டம்

கொழும்பு, டிசெ. 28
முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதைக் கண்டித்து யாழ்ப்பாண நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று காலை 9 மணிக்கு முன்னெடுக்கப்பட்டது. முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகள் 2

## உதயன் மீதான வழக்கு ஊடக சுதந்திரம் கேள்விக்குறி

கிளிநொச்சி, டிசெ. 28
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தை பிரசுரித்தமைக்காக உதயன் பத்திரிகை மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் 2



### பிரிட்டனிலிருந்து வந்தவர்களால்

## மாற்றமடையும் வைரஸ் இலங்கையில் கண்டறிவு

கொழும்பு, டிசெ. 28
பிரிட்டனில் தீவிரமடையும் புதிய கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான இரு வர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இலங்கையைச் சேர்ந்த 6பேர் பிரிட்டனிலிருந்து நாடு திரும்பியி ருந்தனர். 2

## மாகாணசபை தேர்தல் ஒத்திவைப்புக்கு ஆதரவு வழங்குகின்றது சஜித் அணி

கொழும்பு, டிசெ. 28
கொரோனா பரவல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்ட பின்னரே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் 2



## வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மத்தள ஊடாக இன்று வருகை

கொழும்பு, டிசெ. 28
வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 185 பேர் இன்று நண்பகல் 2 மணியளவில் மத்தள மஹிந்த ராஜ பக்ச சர்வதேச 2

## புதினம் தெரியுமோ?

**மேலதிகாரிகளுக்கு இப்போது தேவைப்படுவது திறமையான அலுவலர்கள் அல்ல. தமக்கு ஆமாம் போடும் அலுவலர்களே தேவை.** 3

# ஒன்றுபட்டு எமது...

'ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம்' எனும் தொனிப்பொருளில், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தமிழ் அரசியல் கைதிகளையும் உடன் விடுவிக்கவேண்டும். நாங்கள் எமது குடும்ப உறவுகளுடன் கூடி வாழ வேண்டும்.
தொடர்ந்து ஏமாற்றாதே! துரோகம் செய்யாதே. கைதிகளது உறவுகளின் வலியை புரிந்து கொள்ளுங்கள். சமயத் தலைவர்களே சமூக ஆர்வலர்களே சர்வ கட்சிப் பிரதிநிதிகளே தமிழ் அரசியற் கைதிகளை சிறை மீள குரல் கொடுங்கள். கைதிகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு உண்டு. தசாப்தங்கள் கடந்தும் தடுப்பு சிறை தொடர தமிழர் நாம் செய்த பாவம் என்ன? எம்முடைய உறவுகளை உயிருடன் சாகடிக்க வேண்டாம்.
கொரோனாத் தாக்கத்திலிருந்து கைதிகளைப் பாதுகாக்க வேண்டும். அரசே பாராபட்சம் காட்டாதே என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.
தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், சட்டத்தரணிகள் மற்றும் மதத் தலைவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (ஓ,20)

## தாயும் 3 வயதுக் குழந்தையும்...

12 மணியளவில் தாயையும், சகோதரியையும் காணாத அவரது மூத்த மகள் அருகிலிருந்த தனது அப்பம்மாவிடம் சென்று தெரிவித்துள்ளார்.
அவர்களும் வந்து தேடியநிலையில் இருவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை.
ஊர் மக்களும் தாயையும் பிள்ளையையும் தேடியுள்ளனர். நீண்டநேரமாகியும் அவர்களது நிலை தெரியவில்லை.
பின்னர் அவரது வீட்டுக்கு அருகில் இருந்த வயல் கிணற்றுக்கு அருகில் துவாயும், குடையும் இருந்தமை பொதுமக்களால் கண்டறியப்பட்டது.
சந்தேகமடைந்த பொதுமக்கள் ஓமந்தை பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.
அங்கு வந்த பொலிஸார் நீர்பம்பிகளின் மூலம் கிணற்று நீரை வெளியேற்றினர். கிணற்றுக்குள் இறங்கி தேடுதல் நடாத்தினர். இதன்போது தாயினதும் குழந்தையினதும் சடலங்கள் மீட்கப்பட்டன.
சடலங்களை பார்வையிட்ட நீதிவான் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். சடலம் மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.
உயிழந்த பெண் அவரது மூத்த மகளுக்கு எழுதியதாகச் சொல்லப்படும் கடிதமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (ஓ,110)

## மாற்றமடையும்...

பிரிட்டனுக்கான விமான சேவை நிறுத்தப்படுவ தற்கு முன்னரே அவர்கள் இலங்கைக்கு வந்திருந்தனர். தனிமைப்படுத்தலில் இருந்த அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ,இ)

## மாகாணசபை தேர்தல்...

திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு வலியுறுத்தினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகவே இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது.
அதனை நடைமுறைப்படுத்தும்போது சிற்சில குறைப்பாடுகள் ஏற்பட்டிருக்கலாம். எனவே, அவற்றை நிவர்த்தி செய்து மாகாணசபை முறைமை பலப்படுத்தப்படவேண்டும்.
மாகாணசபைகள் இல்லாததால் செலவுகள் குறைந்துள்ளன என்று முன்வைக்கப்படும் தர்க்கங்களை ஏற்கமுடியாது.
ஏனெனில் மாகாணசபை பொறிமுறை தொடர்ந்தும் இயங்குகின்றது. மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சிக்கு பதிலாக ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர் ஊடாக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.
ஆகவே, மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். நடத்தப்படவேண்டிய காலகட்டம் தொடர்பில் கேள்வி எழுகின்றது. தற்போதைய சூழ்நிலை மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு பொருத்தமான காலம் அல்ல.
கொரோனா பரவலைக்கட்டுப்படுத்துவதற்கே தற்போது முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.
அவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் சுதந்திரமான தேர்தலுக்கான சூழல் உருவாக வேண்டும். அப்போது தேர்தலை நடத்தலாம்.
மாகாண சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் மாத்திரமே நிறுத்தப்பட்டுள்ளன.
மற்றும்படி மாகாணசபைகளில் வழமைபோல் செலவுகள் இடம்பெறுகின்றன, என்றார். (ஓ,44)

## மாகாணசபைத்...

தலைமையில் நடைபெறவுள்ளது.
ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அமைச்சர்களுக்கும், ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
மாகாண சபைகளுக்கான தேர்தல் மற்றும் முஸ்லிம்களின் ஜனாஸா விவகாரம் ஆகியன தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.
மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ஆளும்கட்சியிலுள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தாலும் ஒருசிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். பௌத்த தேரர்களும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.
அதேபோல கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படக்கூடாது என வலியுறுத்தலும் விடுக்கப்பட்டுவருகின்றது.
இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுங்கட்சி கூட்டத்தை ஜனாதிபதி அவசரமாக கூட்டியுள்ளார். (ஓ,44)

## ஜனாஸா...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் மக்கள் கலந்து கொண்டிருந்தனர். (ஓ,20)

## உதயன் மீதான வழக்கு...

செய்திருப்பது ஊடக சுதந்திரத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறு பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் எதிர்காலத்தில் தங்கள் ஊடகப் பணியை சுதந்திரமாக முன்னெடுப்பதை தடுப்பதற்கான எச்சரிக்கையாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது.
உதயன் பத்திரிகை மீது அரசால் கடந்த காலங்களில் அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டு வந்தாலும், உதயன் அந்த அடக்கு முறைகளை அத்திவாரங்கள் ஆக்கி நிமிர்ந்து நிற்கின்றான்.
ஆட்சியில் உள்ள அரசு தமிழர்களின் ஜனநாயக ரீதியான போராட்ட நியாயப்பாட்டை சிதைக்க வேண்டுமானால் உதயன் என்கிற தமிழர்களின் குரலை நசுக்க வேண்டும் என்கின்ற முடிவை எடுத்துள்ளார்கள் போல் உள்ளது. உண்மையில் இம் முடிவு மக்கள் ஆட்சி மற்றும் நல்லாட்சி தத்துவத்தை மீறும் செயல்.
இந்த நாட்டில் மக்களின் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுகின்றது என்பதை வெளிக்காட்டும் ஒரு செயல். சம்மந்தப்பட்ட தரப்புக்கள் இதை கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதுடன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கு எனது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன், என்றுள்ளது. (ஓ,6)

## தம்மிக்கவின்...

பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார். அவருடன் சேர்த்து 12பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ,இ)

## வெளிநாட்டு...

விமான நிலையம் ஊடாக இலங்கைக்கு வந்தனர். இவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. (ஓ,26)

# அரசுக்கு அபாய....

வர தேரர் ஆகியோர் இணைந்து ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினர். இதன்போதே மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட மெதகொட அபயதிஸ்ஸ தேரர், ஒருமித்த நாடு என்ற சொற்பதம் மட்டும் எஞ்சும் விதத்தில் நாட்டை பிரிவினைவாதத்தை நோக்கி அழைத்துச்செல்லும் வேலைத்திட்டமே மாகாணசபை முறையாகும். ஒரு புறத்தில் பிரிவினைக்கு வழி வகுப்பதுடன், மறுபுறத்தில் நிதி விரயத்தையும் ஏற்படுத்துகின்றது.
மாகாணசபை முறைமை இந்நாட்டுக்கு தேவையில்லை என்பது கடந்த சில வருடங்களில் உறுதியாகிவிட்டது. புதிய அரசமைப்பு இயற்றப்படும் வேளையில் இயற்கை சாவடைந்துள்ள மாகாணசபைகளுக்கு உயிர் கொடுக்க முற்படக்கூடாது. அவ்வாறு முயற்சித்தால் அது 69 லட்சம் மக்களின் ஆணையைமீறும் செயலாகும்.
அரசியல்வாதிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு பதவிகளை வழங்குவதற்காக மக்களின் அபிலாசைகளை மீறும் வகையில் தீர்மானம் எடுக்கப்படக்கூடாது. மாகாணசபை முறைமைக்கு எதிர்ப்பு இருக்கின்றது, ஆக தேர்தலை நடத்தி அந்த எதிர்ப்பை அரசுக்கு எதிரான எதிர்ப்பாக மாற்றிக்கொள்ள வேண்டாம், என்றார்.
'மாகாணசபை உறுப்பினர்களுக்காக வருடாந்தம் 853 கோடி ரூபா செலவிடப்படுகின்றது. அதனை வழிநடத்துவதற்கும் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. ஆகவே, வெள்ளை யானைகளாக மாகாணசபை முறைமை வேண்டாம்' என்று இத்ததெமலியே ஹிந்தசார தேரர் வலியுறுத்தினார்.
ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பேராசிரியர் பிடவல உபாலி தேரர், 'சாவடைந்துள்ள மாகாண சபைகளை சவப்பெட்டிகளில் போட்டுள்ளோம். ஆணி அடித்து புதைப்பதற்கு பதிலாக எதற்காக உயிர் கொடுக்க முற்படவேண்டும். அமைச்சரவை எண்ணிக்கையை குறைத்துவிட்டு மறுபுறத்தில் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மாகாணசபைகள் ஊடாக கவனிப்புகள் செய்யப்படவுள்ளன. மக்களும், பௌத்த தேரர்களுமே மஹிந்த சூறாவளியை ஏற்படுத்தினர். எதிர்ப்பையும்மீறி மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுமானால் அந்த சூறாவளியை திசை திருப்புவதற்கு மக்களும், தேரர்களும் முன்னிற்பார்கள்' என்றார்.
அதேவேளை, எல்லே குணவங்க மற்றும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் ஆகியோரும் மாகாணசபைத் தேர்தலுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (ஓ,44)

# ஆஸ்திரேலிய நிறுவனத்தின் கனியவள அகழ்வை நிறுத்துக

## மன்னாரில் கவனவீர்ப்பு

மன்னார், டிசெ. 28
ஆஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட நிறுவனத்தால் மன்னார் தீவில் கனியவள மண் அகழ்வுக்கான முன்னெடுப்புக்களை தடுத்து நிறுத்தக்கோரி மன்னார் பேருந்து நிலையத்துக்கு முன்னால் இன்று காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மன்னார் பிரஜைகள் குழு மற்றும் மன்னாரின் சுற்றுச் சூழலை பாதுகாப்போம் அமைப்பு ஆகியனவற்றின் ஏற்பாட்டில் இக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கான மனு மற்றும் மாவட்டச் செயலருக்கான மனு என்பன மன்னார் மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டன.
அத்துடன் கனியவள மண் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கையெழுத்துப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. (ஒ,60)




## புதினம் தெரியுமோ

வடக்கிலும் இதுதான் நடக்கின்றது. யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலை ஒன்றுக்கு அனுமதி கோரி இரண்டு மாணவர்களின் விண்ணப்பங்கள் ஒருவரால் சமர்பிக்கப்பட்டன. அந்தப் பாடசாலைக்கு அவர்களை அனுமதிப்பதற்கான தகைமைகள் இல்லை என்று நிராகரிக்கப்பட்டுள்ளன. மேலதிகாரி ஒருவரிடமிருந்து அழைப்புச் சென்றபோதும் வலயத்திலிருந்த அந்த அதிகாரி அனுமதி மறுத்துள்ளார். குறிப்பிட்ட மாணவர்களை அனுமதிக்குமாறு மேலதிகாரி எழுத்தில் கடிதம் அனுப்பியுள்ளார். இதனையடுத்து வலயத்திலிருந்த அனுமதிக்குப் பொறுப்பான அந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் அனுமதித்துள்ளார். தன்னிடம் எழுத்தில் கடிதம் வாங்கி அனுமதியை வழங்கியமை தொடர்பில் மேலதிகாரிக்கு ஆத்திரம். முல்லைத்தீவிலிருந்து அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த அவரை திரும்பவும் கஷ்டப் பிரதேசத்துக்கு இடமாற்றியிருக்கின்றாராம் அந்த மேலதிகாரி. இப்படித்தான் வடக்குக் கல்விப் புலம் இருக்கின்றது.

பட்சி

## இந்திய மீனவர்களின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 22 பேரையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.
மீனவர்களை தொடர்ந்தும் படகினுள் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் அவர்களுக்குரிய கொரோனா பரிசோதனையை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். (ஒ,25)

## நல்லூர் சபையை ரெலோ கண்வைக்க கோப்பாயை குறிவைக்கிறது தமிழ் அரசு

யாழ்ப்பாணம், டிசெ. 28
உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் மேற்கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபை தவிசாளர் பதவியை தமிழ் அரசுக் கட்சிக்கு வழங்குமாறு அந்தக் கட்சியின் கோப்பாய்த் தொகுதிக் கிளை கட்சித் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.
நல்லூர் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டது. சபையின் தவிசாளராக இருந்த தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த தியாகமூர்த்தி பதவி விலகியுள்ளார். அந்த வெற்றிடத்துக்கு ரெலோ உறுப்பினரை நியமிக்குமாறு அந்தக் கட்சி கோரி வருகின்றது.
உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது நல்லூர் பிரதேச சபையின் முன்னிரண்டு ஆண்டுகள் தமிழ் அரசுக் கட்சியும் பின்னிரண்டு ஆண்டுகள் ரெலோவும் தவிசாளர் பதவியை பெற்றுக் கொள்வது என்ற அடிப்படையில் போட்டியிட்டிருந்தன.
அதற்கு அமைவாக அதனைக் கோருகிறோம் என ரெலோ கட்சி தெரிவித்திருந்தது.
இந்த நிலையில் இதே ஒப்பந்தத்தின் அடிப்படையில் வலி.கிழக்கு பிரதேச சபையில் முன்னிரண்டு ஆண்டுகள் ரெலோக்கும் பின்னிரண்டு ஆண்டுகள் தமிழ் அரசுக் கட்சிக்கும் என்று கூறப்பட்டிருந்தன.
இதனை நடைமுறைப்படுத்துமாறே தமிழ் அரசுக் கட்சியின் கோப்பாய்க்

## மாவட்ட காணி பதிவுகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.28
வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு, நாளை மறுதினம் 30 ஆம் திகதி மதியம் 12 மணியுடன் காணி மாவட்டப் பதிவகத்தின் கருமபீடக்கடமைகள் முடிவுறுத்தப்படும் என்று யாழ்ப்பாண காணி மாவட்ட பதிவாளர் அறிவித்துள்ளார்.
மீண்டும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் வழமைபோல் அனைத்துச் சேவைகளும் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## சுத்திகரிப்பு தொழிலாளர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு!!

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்ப்பாணம் மாநகர சபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இன்று பணிப் புறக்கணிப்புப் போராட்டம் மேற்கொண்டதுடன், கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடத்தினர்.
கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் யாழ்ப்பாணம் மாநகர சபை வளாகத்தில் நடத்தப்பட்டது.
மாநகர சபை சுத்திகரிப்பு ஊழியர்களின் நாளாந்த வரவைப் பதிவு செய்யும் கைவிரல் அடையாளப் பதிவு இயந்திரம் பழுதடைந்ததை அடுத்து, அதைத் திருத்துவதற்கு மாதாந்தக் கொடுப்பனவில் இருந்து ஆயிரம் ரூபா கழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கொரோனாத் தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் குருநகர், திருநகர் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமையையும் கண்டித்தே அவர்கள் இந்தப் போராட்டங்களை மேற்கொண்டனர்.
இந்தப் போராட்டங்களில் 300 க்கும் மேற்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஈடுபட்டதுடன், யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர். (ற-25)

## 2024இலும் சஜித்தே ஜனாதிபதி வேட்பாளர்

கொழும்பு, டிசெ. 28
2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியின் வேட்பாளராக சஜித் பிரேமதாசவே போட்டியிடுவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.
கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, 2024 ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே எமது தரப்பு வேட்பாளரின் பெயர் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படும்.
கட்சி மற்றும் கூட்டணியின் தலைவர்தான் வேட்பாளராக களமிறங்குவது சம்பிரதாயம். அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பதவி வகிக்கின்றார்.
எதிர்காலத்தில் அமையவுள்ள கூட்டணியின் தலைவராகவும் அவரே செயற்படுவார். சஜித்தான் ஜனாதிபதி வேட்பாளர் என்பது தெளிவு. தேர்தலை எதிர்கொள்வதற்கான பலமான வேட்பாளரும் அவரே. அவரைவிட மாற்றுவழி இல்லை.
அதற்கான தேவையும் எழாது, என்றார். (ஒ,44)

## பிரபல சிங்கள பாடகர் காலமானார்



கொழும்பு, டிசெ.28

பிரபல சிங்கள பாடகர் ஷெல்டன் முத்துனமகே தனது 73 ஆவது வயதில் காலமாகினார்.

இவர் நீர்கொழும்பிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# உக்ரைன் சுற்றுலாவாசிகள் இன்றையதினம் இலங்கைக்கு

கொழும்பு. டிசெ.28

உக்ரைனில் இருந்து 200 சுற்றுலா பயணிகள் இன்று இலங்கைக்கு வர உள்ளனர் என்று விமான மற்றும் விமான சேவைகள் துறையின் தலைவர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார். இவர்கள் மத்தள சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடையவுள்ளனர்.

இலங்கையில் கொரோனா பரவலையடுத்து நாட்டை மீண்டும் திறக்கும் அரசின் செயற்றிட்டத்தின்கீழ், முதற் கட்டமாக இன்று உக்ரைனிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரவுள்ளனர். இவர்களுக்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையம் ஆகியன தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என சுற்றுலாத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு நாட்டில் சில இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த இடங்களில் மாத்திரமே சுற்றுலாப் பயணிகள் தங்கியிருந்து தமது சுற்றுலாவை மேற்கொள்ள முடியும் என இலங்கை சுற்றுலாத்துறை தெரிவித்துள்ளது. (ந-இ)

## சாதாரண தரப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை ஆரம்பம்

கொழும்பு, டிசெ.28

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் தெரிவித்துள்ளார்.

இதில் 11 பாடவிதானங்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைகளை மதிப்பீடு செய்யும் பணிகள் அடுத்த மாதம் 15ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன எனவும் ஐந்து கட்டங்களின் கீழ் 17 நகரங்களில் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் அவர் கூறினார்.

உயர்தரப் பரீட்சை விடைகளை மதிப்பீடு செய்யும் பணிகள் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## திருமண நிகழ்வில் பங்கேற்ற 23 பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.28

களுத்துறை, அளுத்கம பகுதியில் திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்ட 23 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற சிலரே இவ்வாறு தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## சுகாதார விதி மீறல் : கைதாகினர் 39 பேர்

கொழும்பு, டிசெ.28

முகக்கவசம் அணியத் தவறியமை மற்றும் சுகாதார விதிகளை பின்பற்றத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக கடந்த 24 மணிநேரப் பகுதியில் 39 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய ஆயிரத்து 899 பேர் மொத்தமாக கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## பேருவளையில் இரண்டு மாதங்களில் 445 தொற்றாளர்

கொழும்பு, டிசெ.28

பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 445 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கொரோனா மூன்றாவது அலையின்போது, முதலாவது தொற்றாளர் பேருவளை தியலகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் இனங்காணப்பட்டிருந்தார். இந்த நிலையில் ஒக்ரோபர் 28ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 26ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 445 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதேவேளை கிறிஸ்மஸ் தினத்தில் மூன்று மாத குழந்தை ஒன்றுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. (ச)

## மஞ்சளுடன் நால்வர் கைது

காலி, டிசெ. 28

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை மஞ்சளுடன் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த நபர்களிடமிருந்து 20 ஆயிரம் கிலோ கிராம் மஞ்சள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

ஹறுகம கலமண்டிய மீன் பிடித் துறைமுகத்துக்கு அருகில் உள்ள இடத்தில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அதிரடிப்படையினரால் தெரிவிக்கப்படுகின்றது. (ரி5)




## வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில்

# மேலும் 16 பேருக்கு கொரோனாத் தொற்று


நுவரெலியா, டிசெ.28

நுவரெலியா, வட்டவளை ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த ஊழியர்களில் மேலும் 16 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியானதையடுத்து அங்கு தொழில் புரிந்தவர்களிடம் பி.சி. ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் கடந்த 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று 27ஆம் திகதி வெளியாகின. இதில் மேலும் 16 ஊழியர்களுக்குத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வட்டவளை ஆடைத் தொழிற்சாலையில் இதுவரை 55 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் இவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## கிண்ணியாவில் மேலும் இருவருக்கு தொற்று உறுதி

திருகோணமலை, டிசெ.28

திருகோணமலை கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அஹமட் லேன் பகுதியில் மேலும் இருவருக்கு தொற்று உறுதியாகியுள்ளது என கிண்ணியா சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 10 வயது சிறுவனுக்கும், 55 வயதுடைய நபரொருவருக்குமே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

# இலங்கை ரூபா பெறுமதியில் சரிவு

கொழும்பு, டிசெ.28

2020 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் டிசெம்பர் 24 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபா 4.5 வீதம் மதிப்பிறக்கமடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதேவேளை, இந்த காலப்பகுதியில் யூரோவுக்கு நிகரான இலங்கை ரூபா 12.3 வீதம் மதிப்பிறக்கமடைந்துள்ளது. ஜப்பானிய ஜென்னுக்கு நிகராக 9.0 வீதமும், ஸ்ரேலிங் பவுணுக்கு நிகராக 7.8 வீதமும், இலங்கை ரூபா மதிப்பிறக்கமடைந்துள்ளது. இந்திய ரூபாவுக்கு நிகராக இலங்கை ரூபா 1.1 வீதம் மதிப்பிறக்கமடைந்துள்ளது.

கடந்த சில தினங்களாக பணப் பரிமாற்ற வீதங்கள் தேவையற்ற வகையில் ஏற்றம், இறக்கம் கண்டுள்ளன. இதனால், வேறு நடவடிக்கை எடுக்கும் அதேவேளையில் தேசிய அந்நியச் செலாவணி சந்தையில் ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்த பொருத்தமான நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ந-இ)

# அடக்கத்தில் ஆதாயம் பெற அரசியல்வாதிகள் முயற்சி

## ஆனந்த தேரர் சாடல்



கொழும்பு, டிசெ.28

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளின் ஊடாக அரசியல் இலாபம் பெற சில அரசியல்வாதிகள் முயல்கின்றனர் என அஸ்கிரிய பீடத்தின் பிரதிபதிவாளர் நாரம்பனவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார். கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை என்ன செய்வது என்பது தற்போது தீர்வு காணமுடியாத புதிராக மாறிவிட்டது.

தற்போதைய நிலையில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பிரிவினைகளை உருவாக்காமல், எந்த சக்திக்கும், செல்வாக்குக்கும் அடிபணியாமல் ஒரேநாடு ஒரே சட்டம் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்ட சில பகுதிகள் விடுவிப்பு

கொழும்பு, டிசெ.28

கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த சில பகுதிகள் இன்று திங்கட்கிழமை முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுகின்றன என அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய டேம் வீதி, வாழைத்தோட்டம் மற்றும் மருதானை பொலிஸ் அதிகாரப் பிரிவுகள் இன்று காலை 5 மணிமுதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன .

அத்துடன் கொம்பனி வீதி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேகந்த மற்றும் ஹுனுப்பிட்டிய கிராமசேகவர் பிரிவுகளும் இன்று முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

மேலும் வெள்ளவத்தை பொலிஸ் அதிகாரப் பிரிவுக்கு உட்பட்ட மயூரா பிரதேசம், பொரளை பொலிஸ் அதிகாரப் பிரிவுக்கு உட்பட்ட ஹல்கஹவத்த, காளிபுள்ளவத்தை மற்றும் வெல்லப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லக்சந்த செவன என்பனவும் இன்று காலை 5 மணிமுதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, எஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளும் கொடக்கவல பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில பகுதிகளும் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## மட்டக்களப்பு இளைஞன் ஆஸ்திரேலியாவில் சாவு

கான்பெரா, டிசெ.28

தமிழ் புகலிடக்கோரிக்கையாளர் ஒருவர் ஆஸ்திரேலியாவின் விக்டோரியா நியூ சவுத் வேல்ஸ் மாநில எல்லையிலுள்ள லிபரூ அருகிலுள்ள ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பட்டிருப்பு தொகுதி பழுகாமத்தைச் சேர்ந்த சோ. திசாந்தன் (வயது 28) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என அவரது நண்பர்கள் தெரிவித்தனர்.

கிறிஸ்மஸ் தினத்தன்று தனது நண்பர்களுடன் முரே ஆற்றுக்குச் சென்ற அவர் அங்கு நீச்சலில் ஈடுபட்டபோது காணாமல் போயுள்ளார். தொடர்ந்து இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் நேற்று பிற்பகல் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## தொற்றைக் கட்டுப்படுத்த இலகு வழி தேடும் அரசு

### சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.28



கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் மலிவான இலகுவான வழிமுறைகளை அரசாங்கம் தேடுகின்றது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நம்பகதன்மையற்றவை. அதிகாரிகள் அனுமதிவழங்காத ஆயுள்வேத மருந்தை அரசாங்கம் ஊக்குவிக்கின்றது. பொதுமக்கள் அதன் பின்னால் செல்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## மணல் அகழ்வுப் பகுதிகளை பேணத்தவறின் அனுமதி மறுப்பு

### சுற்றாடல் அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, டிசெ.28

கருங்கல், மண் மற்றும் மணல் அகழ்வுக்கான பகுதிகளை உரிய முறையில் பேணாவிடின் மீண்டும் அதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்காதிருக்க சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கருங்கல், மண் மற்றும் மணல் அகழ்வுக்கான பகுதிகளை உரிய முறையில் பேணாவிடின், இந்தப் பகுதிகள் கடுமையாக சேதமடையும். இதனால் அந்த பகுதிகளில், விலங்குகள் உள்ளிட்டவை விபத்துகளுக்கு உள்ளாவதுடன் சில சந்தர்ப்பங்களில் உயிரிழப்புகளும் பதிவாகக்கூடும் எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (வ-இ)

# கொரோனாப் பாணி தயாரிப்பு; கைவிட்டார் தம்மிக பண்டார

கொழும்பு, டிசெ.28

கொரோனாத் தடுப்புக்கான ஆயுள்வேதப் பாணியைத் தயாரிக்கும் உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து விலகுகிறேன் என கேகாலை மருத்துவர் தம்மிக பண்டார அறிவித்துள்ளார். இந்த மருந்து தயாரிப்புக்காக தனது சொந்தப் பணத்திலிருந்து 2 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. இந்த நிலையில், தனக்காக எவரும் முன்வராமையால் இந்த மருந்து தயாரிப்பிலிருந்து விலகுகிறேன் என வரக்காபொல பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்டவர்களிடம் தம்மிக பண்டார அறி வித்துள்ளார். எனினும், தான் வசிக்கும் பிரதேசத்திலுள்ள அனைவருக்கும் இந்த மருந்தை வழங்கிய பின்னரே இந்த மருந்து தயாரிப்பை முழுமையாக கைவிடுவேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)



# பொகவந்தலாவவில் 10 புதிய தொற்றாளர்கள்

பொகவந்தலாவ, டிசெ.28

பொகவந்தலாவ பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்று இனங்காணப்பட்ட 10 கொரோனாத் தொற்றாளர்களும் மாத்தறை கம்புருகமுவ கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என பொகவந்தலாவ பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

நோர்வூட் வெஞ்சர் கீழ் பிரிவு தோட்டப் பகுதியில் மூன்று தொற்றாளர்களும் டிக்கோயா இன்ஞஸ்ரீ தோட்டப் பகுதியில் ஐந்து தொற்றாளர்களும் நோர்வூட் போற்றி மற்றும் டிக்கோயா பட்ல்கல ஆகிய தோட்டப் பகுதிகளில் இருவருமென பத்து தொற்றாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

# குறுஞ்செய்தியில் மின்சாரப் பட்டியல்

கொழும்பு, டிசெ.28

மின்சாரப் பட்டியலை குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் ஊடாக நுகர்வோருக்கு அனுப்பும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என மின்சக்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். புதிய தொழில்நுட்பத்தின் மூலம் பொருத்தப்படும் ஸ்மார்ட் மீற்றர் ஊடாக அலுவலகத்திலிருந்தே மின் கட்டணத்தை தயார்செய்ய முடியும். இதன் மூலம் மின்மானி வாசிப்போர் அல்லது மின்பட்டியலை விநியோகிப்பவர்கள் தொழில்வாய்ப்பை இழக்க மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ரி5)

# தேவைக்கேற்ப ஊழியர்களை அரச பணிக்கு அழையுங்கள்

## அமைச்சுச் செயலர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து தேவைக்கு ஏற்ப அரச பணியாளர்களை கடமைக்கு அழைக்குமாறு நிறுவனப் பிரதானிகளுக்கு பொதுச் சேவை, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் ஜே. ரத்னசிறி அறிவுறுத்தியுள்ளார்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி அரச ஊழியர்கள் வருகை தந்த பின்னர் கொரோனா நிலைமையை கருத்தில் கொண்டு அவசியமான நபர்கள் பணிக்கு அழைக்கப்படுவது போதுமானதென அவர் குறிப்பிட்டுள்ளார். பணிக்கு வரும் போது பற்றிக் அல்லது தங்களுக்கு பிடித்த பொருத்தமான உடைகளில் வரலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா நிலைமையில் குறைவு ஏற்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவு அறிவித்தால், அரச ஊழியர்கள் வழமையைப் போன்றே கடமைக்கு வர வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ,இ)

# காலியில் மூடப்பட்டது ஆடைத்தொழிற்சாலை

## அடையாளம் காணப்பட்டனர் புதிய தொற்றாளர்கள்

காலி, டிசெ.28

காலி நகரில் அமைந்துள்ள ஆடை உற்பத்தி தொழிற்சாலை ஒன்றில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், குறித்த ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த தொழிற்சாலையில் பணிபுரியும் மிலித்துவ பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். இதையடுத்து அந்தப் பெண்ணின் இணைப்பாளர்களுக்கு தொழிற்சாலையில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 9 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனாத் தொற்றாளர்கள் 9 பேரில் 6 பேர் காலி நகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசித்து வருபவர்கள். ஏனையோர் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள். கொரோனாத் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 9 பேரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ந-இ)

# தனிமையிலுள்ளோருக்கு உலருணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், டிசெ.28

கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து ‘விதையனைத்தும் விருட்சமே’ செயற்றிட்டம் மூலம் கட்டாய தனிமைப்படுத்தப்பட்ட 30 குடும்பங்களுக்கு உலர்உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இளவாலை வடமேற்கு ஜே/222 கிராம சேவையாளர் பிரிவில் வசந்தபுரம், கூவில்,நல்லிணக்கபுரம் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் 30 குடும் பங்களுக்கே இவ்வாறு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச-222)







# கொவிட் உயிரிழப்பு; வயது ரீதியாக வெளியீடு

கொழும்பு, டிசெ.28

இலங்கையில் கொரோனா மூன்றாவது அலையில் உயிரிழந்தோரின் வயதெல்லையை கொவிட் 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் நேற்று வெளியிட்டுள்ளது.

இதன்படி 70 வயதுக்கு மேற்பட்டவர்களின் உயிரிழப்பே அதிகரித்து காணப்படுகிறது. இதே வேளை இலங்கையில் கொவிட் முதல் அலையில் 13 பேரும், மூன்றாவது அலையில் 174 பேரும் உயிரிழந்துள்ளனர். இதன்படி நாட்டில் இது வரை மொத்தமாக 187 பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என கொவிட்19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வயதெல்லையில் அடிப்படையில், 0-9 வயதுக்கு இடைப்பட்ட ஒருவரும்(0.57%), 10-30 வயதுக்கு இடைப்பட்ட 4 பேரும்(2.30%), 31-40 வயதுக்கு இடைப்பட்ட 5 பேரும்(2.87%), 41-50 வயதுக்கு இடைப்பட்ட 18 பேரும்(10.34%), 5160 வயதுக்கு இடைப்பட்ட 28 பேரும் (16.09%), 6170 வயதுக்கு இடைப்பட்ட 34 பேரும் (19.54%) 71 வயதுக்கு மேற்பட்ட 84 பேரும் (48.28%) இதுவரைஉயிரிழந்துள்ளனர் என குறிப்பி டப்பட்டுள்ளது. (ந)

# பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் கைதி உயிரிழப்பு

வெயாங்கொட, டிசெ.28

வெயாங்கொட பகுதியில் இன்று காலை பொலிஸ் அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலில் பல குற்றங்களுடன் தொடர்புடைய 37 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த 19 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். குறித்த நபரை இன்று காலை வெயாங்கொடவில் உள்ள ஒரு இடத்துக்கு பொலிஸ் அதிகாரிகள் அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன் பின்னர் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதல் காரணமாக அவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே வேளை உயிரிழந்த சந்தேகநபர் மீது மூன்று வழக்குகள் மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# தங்கத்தின் விலை குறைவடைகிறது

கொழும்பு,டிசெ.28

புறக்கோட்டை சந்தை நிலவரப்படி, 24 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை 1 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகின்றது. அத்துடன் 22 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை 96 ஆயிரத்து 200 ரூபாவாகக் காணப்படுகின்றது.

கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதம் 3 ஆயிரம் ரூபா குறைவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை 1 லட்சத்து 8 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-இ)


# கொரோனா இறப்புக்கள் தொடர்பில் பொய்யான செய்திகளை பதிவிடாதீர்

## சுகாதார அமைச்சு பரிந்துரை

கொழும்பு, டிசெ.28

கொரோனா இறப்புக்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பொய்யான பரப்புரைகளை மேற்கொள்கின்றமையைத் தவிர்க்குமாறு கோரி அறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்படும் விதம் தொடர்பாக சில இணை




யத்தளங்கள் போலியான பரப்புரைகளை மேற்கொள்கின்றன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ள அறிக்கைகளின் பிரகாரம்,

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் அனைவரின் சடலங்களும் தகனம் செய்யப்படுகின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் அரசியல் இலாபத்துக்காக சுகாதார அமைச்சின் கொள்கைகளை திரிபுபடுத்தி போலி செய்திகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (ச-இ)

# தொற்றாளரின் சடலங்களை புதைக்க மன்னாரும் தெரிவு

## வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்காக நிலத்தடியிலிருந்து நீர்மட்டம் மிகவும் ஆழமாக இருக்கும் இரண்டு இடங்களை பரிந்துரைத்து அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மன்னார் மறிச்சுக்கட்டியும், கிழக்கு மாகாணத்தில் எரகம பிரதேசமும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் தரை மட்டத்திலிருந்து 30ஆடி ஆழத்தில் கூட நீரை கண்டுபிடிக்க முடியாதென குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ,இ)



# ஆயுள்வேத பாணி தயாரிப்பில் வாசுதேவ

கொழும்பு, டிசெ.28

கொவிட்19 நோய்த் தொற்றைக் குணப்படுத்தக்கூடிய பாணியொன்று தயாரிக்கப்படுகிறது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அண்மையில் நாடாளுமன்றில் கொவிட்டுக்கு எதிரான ஆயுர்வேத பாணி மருந்து கிடைக்கப்பெற்றது. ஆயினும், அதனை நான் பருகவில்லை. இந்தப் பாணி பல நூறு ஆண்டுகளாக சிங்களவர்கள் பயன்படுத்திய மருந்து வகையே. எனவே இந்தப் பாணியை அருந்துவதற்கு அஞ்சத்தேவையில்லை என அவர் குறிபபிட்டுள்ளார்.

தேன், சாதிக்காய், கொத்தமல்லி மற்றும் இஞ்சி என்பனவே இந்த பாணியில் உள்ளடங்கியுள்ளன. வீட்டில் நானும் இந்தப் பாணியை தயாரிக்க உள்ளேன். இதற்காக சாதிக்காயை கொள்வனவு செய்துள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)





# இடைவிடாத கடும் மழையால் தாழ் நிலங்கள் வெள்ளத்தில்!

திருகோணமலை, டிசெ.28

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றிலிருந்து பெய்து வரும் பலத்த மழை காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

திருகோணமலை நகரை அண்மித்த உப்புவெளி, அலஸ்தோட்டம், வரோதயநகர், மட்கோ, புதுக்குடியிருப்பு பகுதிகளிலுள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுத்துள்ளது. தம்பலகாமம், கிண்ணியா, முள்ளிப்பொத்தானை, மூதூர் கிழக்கு, வெருகல் ஆகிய பகுதிகளிலுள்ள தாழ் நிலப் பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. இதனால் வீசப்பட்ட நெல் விதைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி பள்ளிக்குடியிருப்பு -தோப்பூரை இணைக்கும் பிரதான வீதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கட்டைப்பறிச்சான் இறால் பாலத்தை மேவி வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மழை தொடருமானால் இன்னும் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலையிலுள்ளன.(ற-40)

# சம்பந்தனின் கபட நாடகம் தமிழருக்கு புரிவதில்லையாம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

சமஷ்டித் தீர்வுக்கான பல சந்தர்ப்பங்களை தவறவிட்ட இரா.சம்பந்தன் தற்போது தேர்தலுக்காக மீண்டும் அதனைத் தூக்க ஆரம்பித்துள்ளார். சம்பந்தனின் கபட நாடகம் தமிழ் மக்களுக்கு எப்போதும் புரிவதில்லை. இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சமஷ்டி என்ற பதம் சிங்களத் தலைமைகளுக்கும், சிங்கள மக்களுக்கும் பிடிக்காத ஒரு சொல்லாகிவிட்டது. ஆரம்பத்தில் சமஷ்டி என்ற வார்த்தையை சிங்களத் தலைமைகள் தான் பேச ஆரம்பித்தனர். பின் அவர்களே தனிச் சிங்கள சட்டம் கொண்டு வந்தார்கள்.
முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு வரும் வரை சமஷ்டி நோக்கித்தான் அனைவரும் செயற்பட்டோம். அதன் பின்னர் இன்று வரை நடக்கும் சம்பவங்களை சம்பந்தன் மறந்துவிட்டாரா?

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சமஷ்டி கொள்கையை வலியுறுத்தி அன்றைய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவும், ஒற்றையாட்சியை வலியுறுத்தி மகிந்த ராஜபக்சவும் களத்தில் இறங்கி போட்டியிட்டார்கள். 49 சதவீத வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க பெற்றார். அந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூறி தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் சம்பந்தன் குழுவினர் பரப்புரை செய்து தமிழ் மக்கள் வாக்களிக்காமலே சிங்கள மக்கள் 49 சதவீதம் சமஷ்டிக்கு ஆதரவாக வாக்களித்தனர். தமிழ் மக்களை அந்த நேரத்தில் வாக்களிக்க அனுமதித்திருந்தால் ரணில் விக்கிரமசிங்க மூன்றில் இரண்டு வீத பெரும்பான்மை ஆதரவுடன் வெற்றி பெற்றிருப்பார். அந்த வரலாற்றுத் துரோகத்தை தமிழ் மக்களுக்கு செய்த சம்பந்தன் இன்று சமஷ;டி பற்றி பேசுகின்றார்.

தமிழ் மக்களுக்கு அவர் ஏதாவது நன்மை செய்ய விரும்பினால், நல்லெண்ணத்துடன் தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி உருவாக்கும் அணியினருக்கு ஆதரவு தெரிவித்து, இந்திய முறையிலான ஒரு அரசியல் தீர்வை பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன், என்றுள்ளது. (ஒ,இ)

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக 8 வயது சிறுவன் போராட்டம்!

கல்முனை, டிசெ.28

ஜனாஸா எரிப்புக்கு எதிராக எட்டு வயது சிறுவனும், அவனது தந்தையும் கவனயீர்ப்பு நடைபாதை ஒன்றை இன்று மேற்கொண்டனர்.

கல்முனை பிரதேச செயலகத்தில் இருந்து சாய்ந்தமருது வரை இந்தக் கவனயீர்ப்பு நடைபாதை இடம்பெற்றது.

கொரோனாவால் மரணமடைகின்ற முஸ்லிம் களின் ஜனாஸாக்களை பலாத்காரமாக தகனம் செய்யாது நல்லடக்கம் செய்யக் கோரி கல் முனைப் பிரதேச செயலாளரிடம் மனுவொன்றைக் கையளித்த பின்னர் இந்த நடைபாதை போராட்டத்தை ஆரம்பித்தனர். (ற-இ)






கற்பகா திட்டத்தின் 27 ஆவது கட்டமாக, கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவர்களுக்கு, பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அத்துடன் பாடசாலைச் சூழலில் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (க-222)



# ஆயிரம் ரூபா இல்லையேல் தொழிற்சங்க போராட்டம்

## தாழ்நில தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.28

ஜனவரியில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்காவிட்டால் தொழிற்சங்க போராட்டத்துக்கு செல்வோம் என தாழ்நில தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ருவன் கால்லகே தெரிவித்தார்.

மேலும், தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஜனவரியில் ஆயிரம் ரூபாவாக வழங்குவதாக வரவு - செலவுத் திட்டத்திலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் போது எந்த நிபந்தனையும் விதிக்க வில்லை. ஆனால் வரவு -செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்காமல் இருப்பதற்கே தோட்ட முதலாளிமார் நிபந்தனைகளை விதிக்கின்றனர்.

இருப்பினும், தோட்ட முதலாளிமார் விதித்திருக்கும் இரண்டு நிபந்தனைகளை நாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதால், தோட்ட முதலாளிமார்களுடன் இதன் பின்னர் கலந்துரையாடல் தேவையில்லை. அதனால் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டதன் பிரகாரம் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டும். இல்லாவிட்டால் தொழிற்சங்க போராட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்தி ருக்கின்றோம். என்றார். (ந)

# தொற்றாளர்களுடன் மதுபானம் அருந்திய இருவருக்கு தொற்று

காலி, டிசெ.28

கொரோனாத் தொற்றாளர்களுடன் இணைந்து மது அருந்திய இருவர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வங்கி ஊழியர்கள் மூவர் காலியில் உக்வத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற மரணச்சடங்குக்கு கொழும்பில் இருந்து சென்று கலந்துகொண்டுள்ளனர். அவர்கள் மூவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து மரண வீட்டில் கலந்துகொண்ட அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை தொற்றாளர்களுடன் மதுபானம் அருந்திய இருவரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் ஒருவர் காலி நகரத்தில் உள்ள அரசாங்கத்தின பிரதான அலுவலகத்தில் பணியாற்றுபவராகும். அவரால் உக்வத்தை பிரதேசத்தில் கொரோனாப் பரவல் ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (வ-இ)

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகிறது தடுப்பு ஊசி

கொழும்பு, டிசெ.28

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உருவாக்கும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பு மருந்தை இந்தியாவில் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமானதும் ஒரு தொகுதி மருந்து இலங்கைக்கு வழங்கப்படலாம் என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்ட காலநட்புறவைக் கருத்தில்கொண்டு இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் ஐந்து மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் பெருமளவு கொரோனா வைரஸ் மருந்தைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## சீனாவின் நிராகரித்த ரின்மீன்களை மீளேற்றுமதி செய்வதில் தாமதம்

கொழும்பு, டிசெ.28

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன்களில் ஆர்செனிக் அமிலம் கலந்திருப்பதால் அவை நிராகரிக்கப்பட்டு சீனாவுக்கே மீள திருப்பி அனுப்பும் செயற்பாடுகள் கப்பல்கள் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக தாமதமாகியுள்ளன என இலங்கை சுங்கத் துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

384 மில்லியன் ரூபா மதிப்புள்ள 760 மெட்ரிக் தொன் எடையுள்ள 48 கொள்கலன்கள் அடங்கிய ரின்மீன்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. எனினும் அவை நுகர்வுக்கு தகுதியற்றவை என்பதை இலங்கை தர நிர்ணய சபை உறுதிப்படுத்தியதையடுத்து சீனாவுக்கே திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, அதன் ஒரு பகுதி சமீபத்தில் சீனாவுக்கு அனுப்பப்பட்டது. எஞ்சியுள்ளவற்றை அனுப்ப கப்பல்கள் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக, மீளேற்றுமதி செய்யும் செயற்பாடுகள் தாமதம் அடைந்துள்ளன என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## தொற்றுப் பரவலை 2021இல் கட்டுப்படுத்துவது கடினமாம்

### அமைச்சர் சுதர்சினி தெரிவிப்பு



புதிய வீரியமிக்க கொரோனா வைரஸால் அடுத்த ஆண்டில் கொரோனாப் பரவலை கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கலாம் என இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்ணான்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கொரோனா வைரஸ் தடுப்பு முறைகள் தொடர்பில் ஆராய குழுவொன்றை நியமித்து, அதன் பரிந்துரையின் அடிப்படையில் கொரோனா ஒழிப்பு திட்டமொன்றை முன்னெடுக்க வுள்ளோம். 2021இல் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளோம் எனினும் புதியவகை வைரஸ்கள் பரவிவருவதால் இது கடினமாக உள்ளது. ஆகக்குறைந்தது நோயாளர்கள் எண்ணிக்கையை கட்டுபடுத்த பல நாடுகளில் இருந்து மருந்துகளை கொண்டுவர முயல்கின்றோம். கொரோனாத் தடுப்பு மருந்துகள் பல உள்ளதால் அவற்றின் திறனை அறிவது கடினம்.எனினும் எதிர்காலத்தில் இந்த மருந்துகளை அதிக ஆபத்தான பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பயன்படுத்துவதன் மூலம் உயிரிழப்பைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# காளியம்மன் கோபத்தாலேயே பதவி இழந்தார் மேர்வின்

## கூறுகிறார் பூசகர் சிவபாதசுந்தரம்

கொழும்பு, டிசெ.28

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு காளியம்மன் தண்டனை வழங்கியதாலேயே அவர் அதிகாரம் இன்றி உள்ளார் என சிலாபம் முன்னேஸ்வரம் பத்ரகாளியம்மன் ஆலயத்தின் பிரதான பூசகர் காளிமுத்து சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ளதாவது,

காளியம்மன் வரத்தால் சிகிச்சை செய்வது உண்மையானது. அந்த வரம் அனைவருக்கும் கிடைக்கும் ஒன்றல்ல. காளியம்மன் மிகவும் பலமிக்க, பயங்கரமான தெய்வம். அந்த அம்மனை அவமதித்தால், அனைவருக்கும் பாதிப்பு ஏற்படும். அது பயங்கரமான கெடுதியான பலனை கொண்டு வந்து சேர்க்கும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# மூடப்பட்ட பாடசாலையை மீள இயக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி,டிசெ.29

மூடப்பட்ட வன்னேரிக்குளம் குஞ்சுக்குளம் கிராமத்தின் கணேசா வித்தியாலயத்தை மீள இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மணியங்குளம் கிராம மக்கள் கிளிநொச்சி வலய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது;

மணியங்குளம் கிராமத்தில் 220 குடும்பங்கள் வாழ்கின்றன.இக் கிராமத்தின் ஆரம்ப பிரிவு மாணவர்கள் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஸ்கந்தபுரம் இல.02 பாடசாலை மற்றும் ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய வற்றுக்கே சென்று வருகின்றனர்.

இந்நிலையில் மணியங்குளம் கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்குமாறு கல்வி அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வன்னேரிக்குளம் குஞ்சுக்குளம் கிராமத்தின் கணேசா வித்தியாலயம் 2009 ஆம் ஆண்டு மூடப்பட்டது. குஞ்சுக்குளம் கிராமம் முழுமையாக உவரடைந்து மக்கள் இடம் பெயர்ந்தமையால் இந்தப் பாடசாலை மூடப்பட்டுள்ளது. குறித்த பாடசாலையை மணியங்குளம் கிராமத்தில் இயக்குவதன் மூலம் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பிரிவு மாணவர்கள் பெரும் நன்மையடைவார்கள் என்றனர். (ஐரி2)

# கொரோனா வைரஸ் இறுதியானது அல்ல

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

ஜெனிவா, டிசெ. 28

கொரோனா வைரஸ் உலகின் கடைசிப் பெருந்தொற்று அல்ல என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட் ராஸ் அதானம் கெப்ரியாசிஸ் எச்சரித் துள்ளார்.




இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலநிலை மாற்றத்தையும், விலங்குகளின் பாதுகாப்பை யும் சரிசெய்யாமல் மனித குலத்தின் நலத்தை மட்டும் மேம்படுத்துவது துரதிர்ஷ்டம். அவ்வாறான முயற்சிகள் அழிவுக்குத்தான் வழிவகுக் கும். கடந்த 12 மாதங்களில் உலகம் தலை கீழாக மாறிவருகிறது. கொரோனா வைரஸ் நோய்ப் பாதிப்பையும் கடந்து சமூகத்திலும் பொருளாதா ரத்திலும் பாதிப்பை ஏற்ப டுத்துகிறது. பெருந்தொற்று வந்தால் அதை எதிர்கொள்ள எவ்வாறு தயாராக வேண் டும், சுகாதாரத்தைப் பராம ரிப்பது, பெருந்தொற்றுக ளைக் கண்டுபிடிப்பது, தடுப்பது போன்றவற்றில் உலக நாடுகள் முதலீடு செய்ய வேண்டும். இது போன்று பொதுச்சுகாதாரத் தில் உலக நாடுகள் முதலீடு செய்வதன் மூலம் நம்முடைய குழந்தைகள் மற்றும் அவர்க ளின் சந்ததியினர் பாதுகாப் பாகவும் நோய் எதிர்ப்பாற் றல் மிக்கவர்களாகவும் வாழ முடியும் என்றார். (ம-வஇ)




# ஆபத்து நிறைந்த தீவுக்கு மேலும் ஆயிரம் அகதிகள்

டாக்கா, டிசெ. 28

வெள்ளம் மற்றும் சூறாவளிகளால் மோசமாக பாதிக் கப்படக் கூடிய தாழ்வான தீவு ஒன்றுக்கு மேலும் ஆயிரம் ரொஹிங்கிய அகதிகளை அனுப்பும் நடவ டிக்கையை பங்களாதேஷ் ஆரம்பித்துள்ளது. அண்டை நாடான மியன்மாரில் இருந்து வன்முறை கள் காரணமாக 2017ஆம் ஆண்டில் தப்பிவந்த சுமார் ஒரு மில்லியன் ரொஹிங்கிய அகதிகள் தற்போது தென் கிழக்கு பங்களாதேஷின் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

தமது பாதுகாப்பு மற்றும் உரிமையை தரும்வரை மியன்மார் திரும்ப பலரும் மறுத்து வருகின்றனர். எனினும் அகதி முகாம்களில் அதிகரித்து வரும் வன் முறை கள் மற்றும் போதைக் கடத்தல் கும்பல்களால் அந்த முகாம்களை அகற்ற பங்களாதேஷ் அரசு முயன்று வருகிறது.

ஏற்கனவே ஒரு தொகுதியினர் இந்த மாத ஆரம்பத் தில் அந்தத் தீவுக்கு அனுப்பப்பட்ட நிலையில் இரண் டாம் கட்டமாக மேலும் ஆயிரம் அகதிகளை பங்க ளாதேஷ் அனுப்பவுள்ளது. (ம-வஇ)

# கொரோனாத் தடுப்பூசியே உலகின் நம்பிக்கை ஒளி

## போப் பிரான்சிஸ் தெரிவிப்பு

வத்திக்கான், டிசெ. 28

கொரோனாவை ஒழிக்க உதவும் தடுப்பூசிகளின் வளர்ச்சியே உலகத்துக்கான 'நம்பிக்கையின் ஒளி என போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.


தடுப்பூசி உற்பத்தியில் போட் டியை விரும்பாமல், அனைவ ரும் ஒத்துழைப்புடன் செயல் பட்டு கொரோனா நோய்க்கு தீர்வைத் தேடவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி உள்ளார். கொரோனா அச்சுறுத் தலால் கடும் கட்டுப்பாடுகளு டன் வாடிகன் புனித பீட்டர் செயின்ட் சதுக்கத்தில் இடம் பெற்ற ஆராதனையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள் ளார். (ம-வஇ)

# பழமையான உணவுக்கடை இத்தாலியில் கண்டுபிடிப்பு

உரோம், டிசெ. 28

2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகவும் பழமை யான சாப்பாட்டுக் கடையொன்று இத்தாலியிலுள்ள புராதான நகரமான பொம்பேயியில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

அந்தக் கடையில் அழகிய ஓவியங்களும், முழுமை யான அளவில் பானைகளும், சில உணவுப் பொருள்க ளின் தடயங்களும் அவதானிக்கப்பட்டுள்ளன. கடையின் முன்புறம் சேவல், நரி, வாத்து போன்றவற் றின் உருவங்கள் வரையப்பட்டுள்ளதால் இது இறைச் சிக் கடையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. கி.பி. 79ஆம் ஆண்டில் ஏற்பட்ட எரிமலைச் சீற்றத்தால் அழிந்து போன பொம்பேயி நகரத்தில் தொடர்ந்து அகழாய்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-வ-இ)



# படகு கவிழ்ந்ததில் 20 அகதிகள் சாவு!

துனிஸ், டிசெ. 28

புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச்சென்ற படகு ஒன்று துனீசிய கடற்கரைக்கு அப்பால் மத்தியதரைக் கடலில் மூழ்கியதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

துணை சஹாரா ஆபிரிக்க பிராந்தியத்தைச் சேர்ந்த 45 பேருடன் இத்தாலியை நோக்கிப் பயணித்த இந்தப் படகு கடும் காற்றில் சிக்கி விபத்துக் குள்ளாகியுள்ளது. துனீசிய கடலோரக் காவல் படையினரால் 20 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு கரையோர நகரான ஸ்பெக்ஸ் நகருக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. ஏனையவர்கள் தேடப்படுகின்றனர். (ம-வ)

# கொரோனாவை வெளிப்படுத்திய பத்திரிகையாளருக்கு 4 ஆண்டுகள் சிறை

பீஜிங், டிசெ. 28

கொரோனாப் பரவலின் ஆரம்ப காலகட்டத்தில் வுகானுக்குச் சென்று பல உண்மைத் தகவல் களை அம்பலப்படுத்திய பத்திரி கையாளர் ஜாங் ஜோனுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண் டனை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சீனாவை சேர்ந்த முன்னாள் வழக்க றிஞரும் பத்திரிகையாளருமான ஜாங் ஜோன் சீனாவில் கொரோனா உருவான ஆரம்ப கட்டத்தில் அதன் உண்மைத் தன்மையை தெரிந்துகொள்ள வுஹான் சென் றுள்ளார். கொரோனா வைரஸ்




பாதிப்புகள், மக்கள் அனுபவிக்கும் துயரங்கள், சீன அரசின் மென் போக்கு தொடர்பான பல்வேறு உண்மை சம்பவங்களை செய்திகளாக வெளிக் கொணர்ந்தார்.

இதன் மூலமே சீனா அரசு மறைத்த கொரோனா உண்மை நிலவரத்தை உலக ஊடகங்கள் தெரிந்து கொள்ள முடிந்தது. இதை யடுத்து அவர் கடந்த மே மாதம் சீன அரசால் கைது செய்யப்பட்டார்.

அவர் மீது, அரச விதிக்கு மாறாக கொரோனா தொடர்பான செய்திகளை வெளி யிட்டமை, வெளிநாட்டு ஊடகங் களுக்கு வுகானில் பரவிய வைரஸ் தொடர்பாகப் பேட்டி கொடுத் தமை, தவறான தகவல் மூலம் வதந்தி பரப்பியமை என பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. கடந்த நவம்பர் மாதம் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

தண்டனையை எதிர்த்து அவர் மேன் முறையீடு செய்தார். மேன் முறை யீட்டு மனு மீதான விசாரணை இன்று ஷாங்காய் நீதி மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அவருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டது. (ம-வ)